# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 180/மா/2025

**நாள்: 29.05.2026**

B. சரவணன்,
சென்னை–600 017. --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–10,
பெருநகர சென்னை மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்

சென்னை–600 017, தியாகராய நகர், புது தெரு, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. சரவணன் என்பவரின் 21.01.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 22.01.2025 அன்று பெறப்பட்டு 180/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 017, தியாகராய நகர், புது தெரு, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. சரவணன் என்பவர் தனது 21.01.2025 நாளிட்ட மனு மற்றும் அம்மனுவுடன் இணைத்தனுப்பியுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு முகவரியிட்ட 30.09.2024 நாளிட்ட மனுவின் நகல் ஆகியவற்றில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

### 21.01.2025 நாளிட்ட மனு

உள்ளாட்சி நடுவர் அவர்களுக்கு பணிந்து கூறுவது கட்டிட எண் 20/B2 – 20/B1 கட்டிடம் கட்ட சென்னை மாநகராட்சியிடம் சட்டப்படி அனுமதி பெற்று கட்டிடம் கட்டப்பட்டுள்ளதா என்று R.T.I. அதிகாரியிடம் கேள்வி எழுப்பி மனு அளித்தேன் மற்றும் E.B. R.T.I.அதிகாரிகளிடம் வரைப்படம் C.C. அளித்து இணைப்புகள் பெற்றுள்ளனரா என்று கேள்வி எழுப்பி மனு அளித்தேன். பதில் மனுவில் E.B. அதிகாரிகள் கட்டிட உரிமையாளர் வரைப்படம் C.C. அளிக்கவில்லை என்று அளித்த பதில் மனு இம்மனுவுடன் இணைப்பு. சென்னை மாநகராட்சி அதிகாரிகளும் சம்பந்தப்பட்ட கட்டிடம் சட்ட விரோதமாக கட்டப்பட்டுள்ளது என்று அளித்த பதில் மனு இம்மனுவுடன் இணைப்பு மற்றும் 8.10.2024 அன்று நடைபாதை சாலை ஆக்கிரமிப்பு செய்துள்ளதை புகைப்பட வீடியோ ஆதாரங்களுடன் அளித்த புகார் மனு இம்மனுவுடன் இணைப்பு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீதும் கட்டிடத்தின் மீதும் நடவடிக்கை எடுக்க உத்திரவிட கோரி மேல்முறையீடு மனு.

<u>பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு முகவரியிட்ட 30.09.2024 நாளிட்ட மனு</u>

மேற்கண்ட முகவரியில் வசிக்கும் நான் சட்ட ஆர்வலர் கதவு எண்: 17/1, 17/2, 17/3, 17/4 சுப்புராயன் நகர் 2வது தெரு, கோடம்பாக்கம், சென்னை–600 024 என்ற முகவரியில் சில ஆண்டுகளுக்கு முன் பழைய கட்டிடத்தை இடித்து தளம் ஒன்றுக்கு சுமார் 5000 ஆயிரம் சதுரடி என தரை தளம் அதற்கு மேல் இரண்டு தளம் தளத்தில் குடியிருப்பு கட்டிடம் கட்டிடத்தை சுற்றி நான்கு புற இடைவெளியில் இல்லாமல் பார்க்கிங் வசதிகள் இல்லாமல் சென்னை மாநகராட்சியிடம் எவ்விதமான அனுமதியும் பெறாமல் கட்டிய குடியிருப்பு உரிமையாளர்கள் தங்களது வாகனங்களை நடைபாதை மற்றும் சாலையில் நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாக பொது மக்கள் மனுதாரரிடம் தெரிவித்தால் நேரிடையாக அங்கு சென்று எடுக்கப்பட்ட கட்டிடத்தின் புகைப்படங்கள் இம்மனுவுடன் இணைப்பு இந்த மூன்று தள கட்டிடத்திற்கு மாநகராட்சி வரைபட அனுமதி பெறப்பட்டுள்ளதா என்ற கேள்வி எழுப்பி 13–07–2024 அன்று R.T.I. மனு அளிக்கப்பட்டது. அதே தேதியில் வரைப்படம் நகல் கேட்டு சென்னை மாநகராட்சி R.T.I. அதிகாரிக்கு மனுக்கள் அளிக்கப்பட்டது. R.T.I. அதிகாரி கடந்த 21.09.2024 அன்று சம்பந்தப்பட்ட கட்டிடத்திற்கு சட்டபடியான எந்த அனுமதியும் அளிக்கவில்லை என்று அளிக்கப்பட்ட பதில் மனு பின்புறம் இணைப்பு. சென்னை மாநகராட்சி R.T.I. அதிகாரி 21–09–2024 அன்று வரைப்படம் நகல் மற்றும் கட்டிட அனுமதிக்கான சான்று அளிக்க முடியாது என்று அளித்த பதில் மனு பின்புறம் இணைப்பு.

சென்னை மாநகராட்சி R.T.I. மனுவில் குடியிருப்பு கட்டிடங்களுக்கு எந்த அனுமதியும் சட்டவிதிகளின்படி கட்டப்படவில்லை. அடுக்குமாடி கட்டிடம் கட்டுவதற்கு எவ்வித ஆவணங்களும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சமர்ப்பிக்கவில்லை என்று பதில் அளித்த சம்பந்தப்பட்ட மூன்று தள கட்டிடமாக உள்ளதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படத்தில் காணலாம். சட்ட விதிகள் எதையும் பின்பற்றாமல் கட்டப்பட்ட இந்த சட்ட விரோத கட்டிடத்தை இடித்து Parking வசதிகளுடன் சட்டவிதிகள் படி கட்டிடம் கட்ட உரிமையாளருக்கு அறிவுறுத்தி நோட்டீஸ் அளித்து இம்மனுவை கண்ட 15 தினங்களில் பதில் அளிக்க பொது நலன் கருதி இம்மனு அளிக்கப்படுகிறது.''

2. மேற்கண்ட புகார் மனுக்களின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 03.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 17.04.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 24.03.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் முதுநிலை வருவாய் அலுவலர்/மண்டல அலுவலர் தன்னுடைய கடிதம் ம.அ. 10.வ.து. ந.க. எண் ஆர்3/2888/2026 நாள் 10.04.2026–ல், 2026–ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் நடைபெறுவதால் அனைத்து பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களும் தேர்தல் பணியில் ஈடுபடுவதனால் விசாரணையில் கலந்து கொள்ள இயலாத நிலை உள்ளது என்றும், 17.04.2026 அன்று விசாரணைக்கு பதிலாக 2026ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் முடிந்த பின்னர் ஒரு தேதி வழங்க கேட்டுக் கொண்டார்.

5. மனுதாரர் 17.04.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"சென்னை மாநகராட்சி, மண்டலம் 10, வார்டு 131, கோடம்பாக்கம் சுப்பராயன் நகர், 2வது தெரு, கதவு எண்.17/1, 17/2, 17/3, 17/4 என்கிற முகவரியில் கடந்த 2013ம் ஆண்டு தளம் ஒன்றுக்கு 5000 ஆயிரம் சதுர அடியில் மூன்று தளத்துக்கு, மேல் மாநகராட்சி அனுமதி இன்றி கட்டிடம் கட்டப்பட்டு உள்ளது. இக்கட்டிடங்களில் முறையான பார்க்கிங் வசதிகள் இல்லாததால், இக்கட்டிடத்தின் முன் பகுதியில் மாநகராட்சி நடைபாதை மற்றும் சாலைகளில் கட்டிட உரிமையாளர் வாகனங்களை விட்டுச் செல்வதால், நடுசாலையில் நடந்து செல்ல வேண்டிய நிலையில் உள்ளது. அருகாமையில் உள்ள MGR மேல்நிலை பள்ளிகளுக்கு செல்லும் மாணவ, மாணவியர்கள் இவ்வழியாகதான் சென்று வர வேண்டும். பள்ளி மாணவர்கள் குழந்தைகள் என அனைவருக்கும் போக்குவரத்து நெரிசல்களினால் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர். விபத்துகளும் ஏற்படுகிறது. மழை காலங்களில் தண்ணீர் சீராக செல்ல முடியாத நிலையும் உள்ளது. மேற்கண்ட விதி மீறி கட்டப்பட்ட கட்டிடத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் பொது தகவல் அதிகாரி 21.09.2024 நாளிட்ட கடிதத்தில் அனுமதி வழங்கவில்லை என்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பதில் அளித்துள்ளார்.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் சென்னை வளர்ச்சி குழுமம் ஆகிய துறைகளிடம் தகவல் கோரப்பட்டது. மின்வாரியம் 16.01.2025 அன்ற வரைப்படம் அளிக்கவில்லை என்று தகவல் தெரிவித்துள்ளனர். அது போல் சென்னை வளர்ச்சி குழுமம் 26.12.2024 தேதியிட்ட கடிதத்தில் வரைப்படம் சமர்ப்பிக்கவில்லை என்று தகவல் வழங்கியுள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலகத்தில் மேற்குறிப்பிட்ட புகார்கள் தொடர்பாக மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படாததால், மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில், என்னால் வழக்கு தொடரப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது என்பதால் 21.01.2025 நாளிட்ட எனது மனு மீது மேல் நடவடிக்கை தேவையில்லை என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும் இவ்வழக்கின் தொடர்பான கோப்பு என்னிடம் தற்சமயம் எடுத்து வரவில்லை என்பதால் அது குறித்த விவரம் மற்றும் வழக்கு எண் ஆகியவற்றை ஓரிரு நாட்களில் இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்."

6. பெருநகர சென்னை மாநகராட்சி முதுநிலை வருவாய் அலுவலர் தனது 10.04.2026 நாளிட்ட கடிதத்தில் கோரியவாறு, மேற்கண்ட மனு தொடர்பாக எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 15.05.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 22.04.2026 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டு, மனுதாரருக்கும் நகலிடப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–லிருந்து எவ்வித அறிக்கையும் விசாரணை நடைபெறும் நாள் வரை பெறப்படவில்லை. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் சார்பாக எந்த அலுவலரும் விசாரணைக்கு ஆஜராகவில்லை.

7. மனுதாரர் 15.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"எனது முறையீட்டு மனு மீது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலகத்தால் முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்படாததால், எனது புகார் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் W.P.No.17094 of 2025 என்னால் தொடரப்பட்டு, அவ்வழக்கு இன்றுவரை நிலுவையில் உள்ளது என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் எனது புகார் தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டம் 10ன் செயற்பொறியாளர் 15.09.2025 நாளிட்டு அனுப்பிய கடிதத்தின் நகலினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

மேலும், எனது புகார் தொடர்பாக இம்முறைமன்ற நடுவத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலகத்தால் அறிக்கை அனுப்பப்படவில்லை என்பதால், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் மண்டல அலுவலர் மீது உரிய துறை நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்."

8. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

சென்னை மாநகராட்சி, மண்டலம் 10, வார்டு 131, கோடம்பாக்கம் சுப்பராயன் நகர், 2வது தெரு, கதவு எண்.17/1, 17/2, 17/3, 17/4 என்கிற முகவரியில் கடந்த 2013ம் ஆண்டு தளம் ஒன்றுக்கு 5000/– ஆயிரம் சதுர அடியில் மூன்று தளத்துக்கு மேல் மாநகராட்சி அனுமதி இன்றி கட்டிடம் கட்டப்பட்டு உள்ளது என்பதும், இக்கட்டிடங்களில் முறையான பார்க்கிங் வசதிகள் இல்லாததால், இக்கட்டிடத்தின் முன் பகுதியான மாநகராட்சி நடைபாதை மற்றும் சாலைகளில் கட்டிட உரிமையாளர் வாகனங்களை விட்டுச் செல்வதால், அருகாமையில் உள்ள MGR மேல்நிலை பள்ளிகளுக்கு செல்லும் மாணவ, மாணவியர்கள், குழந்தைகள் என அனைவரும் நடுசாலையில் நடப்பதினால் போக்குவரத்து நெரிசலும், விபத்துகளும் ஏற்படுவதாகவும், மழை காலங்களில் தண்ணீர் சீராக செல்ல முடியாத நிலையும் உள்ளதால், இப்புகார் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலகத்தில் மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படாததால், மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில், தன்னால் வழக்கு வழக்கு எண் W.P.No.17094 of 2025—ல் தொடரப்பட்டு, அவ்வழக்கு இன்றுவரை நிலுவையில் உள்ளது என்பதும், எனவே தனது மனு மீது மேல் நடவடிக்கை தேவையில்லை என தெரிவித்திருப்பதும் மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலங்களின் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள புகார் தொடர்பாக, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் W.P.No.17094 of 2025—ல் தொடரப்பட்டு, இன்று வரை நிலுவையில் உள்ளது என்றும், எனவே தனது மனு மீது மேல்நடவடிக்கை தேவையில்லை என்று தெரிவித்திருந்தாலும், மனுதாரரின் வழக்கு எண் W.P.No.17094 of 2025 மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 10.07.2025 நாளிட்டு தீர்ப்பு வழங்கியுள்ளதை இணைய தளத்தின் வாயிலாக அறிய முடிவதால், மனுதாரரின் மேற்கண்ட புகார் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள 10.07.2025 நாளிட்ட தீர்ப்பின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

மேலும், 15.05.2026 அன்று நடைபெற்ற மனுதாரரின் மனு மீதான விசாரணையில் எதிர்மனுதாரர் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் சார்பாக யாரும் ஆஜராகாமலும், எவ்வித தகவலும் இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்காமலும் இருந்தது

ஏற்புடையதன்று. எனவே இம்முறைமன்ற நடுவத்திற்கு எவ்வித அறிக்கையும் அனுப்பாமலும், விசாரணைக்கு ஆஜராகாமலும் இருந்த பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் உதவி பொறியாளர் முதற் கொண்டு அனைத்து சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மே திங்கள் 29–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. B. சரவணன்,
கதவு எண் 1, புது தெரு,
தியாகராய நகர்,
சென்னை–600 017.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.117, N.S.K. சாலை,
கோடம்பாக்கம்,
சென்னை–600 024.

(4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

1/6/26
செயலாளர்.